# வேதாத்திரிய பார்வையில் ஆன்மீக சீர்திருத்த சிந்தனைகள்

# Thoughts of Spiritual Reformation from a Vedic Perspective

***முனைவர் தி. சுமதிராஜேந்திரன்***
*பேராசிரியை, யோகத்துறை*
*அதியமான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*(பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)*
*கிருஷ்ணகிரி*

**Dr. T. Sumathirajendran**
*Professor, Department of Yoga*
*Adhiyaman Arts and Science College*
*(Affillited to Periyar University)*
*Krishnagiri*

**ஆய்வுச் சுருக்கம்**

*ஆன்மீகத்தில் தலைசிறந்து விளங்கிய தமிழகத்தில், நாகரீகம், பண்பாடு, கலாச்சாரம் இவற்றினை தன் உயிரினம் மேலாக கருதி வாழ்ந்தவர்கள் தமிழர்கள். எல்லா உயிர்களிடத்தும் அன்பும் கருணையுமாக வாழ வேண்டும் என்று கூறியதுடன் அவ்வாறு வாழ்ந்து காட்டிய மகரிஷியின் ஆன்மிகக் சீர்திருத்தக் கருத்துகளை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**Abstract**

*This research article discusses in detail about the vethathiri maharishi spiritual reformational ideas which concerntrates on the topics such as spiritual thoughts, uses of silent fasting, prayer, divine feelings and thoughts, uses of mantras, greatness of idol worshop, gloriness of fasting, light and mirror workships and its speciality and benefits are discussed in detail.*

***முக்கியச் சொற்கள்:***
*வேதாத்திரி மகரிஷி, ஆன்மீகம், நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம்*

**Citation**

Sumathirajendran, T. "Thoughts of Spiritual Reformation from a Vedic Perspective." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 2, 2022, pp. 21–26.
DOI: *https://doi.org/10.5281/zenodo.20136051*

**ஆன்மிகம்**

*ஆன்மா என்றால் மனம், உயிர் நெஞ்சம் என்ற பல பொருள் உள்ளன. ஆன்மாவை உணர்தல் என்பது தன்னை உணர்வதாகும். ஆறநெறி வாழ்வு வாழ மக்களுக்கு ஆன்மிக அறிவு அவசியமாகிறது, இதனையே வள்ளலாரும்*

***"உலகில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால்***
***அடையத்தக்க ஆன்ம லாபத்தைக் கால முள்ள போதே அடைய வேண்டும்"***
***(திருவருட்பா உரைநடைப்பகுதி ப.144)***

*கூறியுள்ளது உற்று நோக்க தக்கதாகும் மகரிஷி*

***"இயற்கை இன்பத்தைப் பெற்று தடைப்படாமல் வாழ்கின்ற பெரிய வாழ்வை கடவுளின்***
***அருளைக் கொண்டே அடைக்கூடும்" (மனவளக்கலை I ப.59)***

*என்று அவரவர் அறிவாற்றலுக்கு ஏற்ப ஆன்மீக விளக்கம் பெறலாம் என்கிறார் மகரிஷி.*

**பக்தீ**

*மனதில் இறைவழிபாடு செய்யும்போது ஏற்படும் நெகிழ்ச்சி, ஒரு வித இனிய அன்புணர்வே பக்தியாகும்.*

*இந்த விஞ்ஞான உலகில், அறிவு வளர்ச்சி பெற்ற போதிலும், நவராத்திரி விழா, சரஸ்வதி புஜை, ஆயுத புஜை போன்ற பண்டிகைகளை மக்கள் கொண்டாடி வருகின்றனர்.*

***"பக்தி, விளக்கம், மெய்ப்பொருள் தெளிவு***
***என்ற மூன்று படிகள் மூலமாக அறிவை***
***வளர்த்துக் கொள்வது தான் இறையுணர்வு***
***உண்மையான கடவுள் தன்மையை, விஞ்ஞான***
***புர்வமாக உணர வேண்டுமானால் அதைக்***
***கடமை அறத்திலே தான் உணரமுடியும்"***
***(வேதாத்திரி மனவளக்கலை II. பக் 1871)***

*என்று மகரிஷி கூறுகிறார். பக்தியின் மூலமாக அறிவை வளர்க்க முடியும் என்கிறார் மகரிஷி.*

**மௌன நோன்பு**

*மௌனத்தின் மறுபெயர் அமைதியாகும். இதனை சும்மா இருப்பது, மௌனத்தை மோனம் என்று மக்கள் கூறுவர்.*

*மகரிஷி மௌனத்தைப்பற்றி,*

***"பேசா நோன்பு இயற்கைக்கும் உயிர்க்கும் உள்ள***
***பிணைப்பை நன்குணர்த்திட ஒர் நல்வாய்ப்பாகும்***
***பேசாநோன் யென்பது வாய்மூடல் அல்ல***
***பெரிய மறை பொருள் மனதை அறியும் ஆய்வே"***
***(வேதாத்திரி, ஞானக்களஞ்சியம் II, பா.1635)***

*ஒவ்வொருவரும் தம் கடமைகளை மௌனமாக ஆற்றி வரும் போது மென்மை, இன்பம், நிறைவு, வெற்றி, அமைதி கிட்டும். மௌன காலத்தில் நமது எண்ணத்திற்கு திணிவு உண்டாகும் என்கிறார் மகிரிஷி.*

**தன்னை அறிதல்**

*ஒவ்வொரு மனிதனும் தம்மைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். இதனை மகரிஷி*

***"நான் யார்? துன்பம் ஏன் வருகின்றது? துன்பம்***
***நீங்கிய இன்ப வாழ்வெய்த என்ன வழி?***
***தன்னைப்பற்றி, தன் தேவையைப் பற்றி,***
***தன் செயலின் விளைவைப் பற்றி, தன் தகுதியைப்***
***பற்றி ஆராய வேண்டும்"***

***(வேதாத்திரி, மனவளக்கலை 1. ப.62)***

*என்று எடுத்துரைக்கிறார். பிறர் தவறினை சுட்டி காட்டுவது உலகியல் வாழ்வில் சாதாரண செயலாகிவிட்டது. தன்னை பற்றியும் தனது குறைகளை பற்றியும் உணர்ந்தவர்களால் மட்டுமே அமைதியாக வாழமுடியும் என்கிறார் வேதாத்திரி.*

**இறைவழிபாடும் இறையுணர்வும்**

***"இறைவன் என்றால் கடவுள், சாமி, தெய்வம், இயற்கை எனப் பல வகையில் பொருள் கொள்லாம். (ஆன்மாவே ) இறைவன்" (மாண்டுக்ய உபநிஷசம் பக் 12-13)***

*என்கிறது **உபநிஷசம்** இறைவழிபாடு என்பது ஏதேனும் ஒன்றையோ, ஒரு பொருளையோ, இயற்கையானவை, செயற்கையானவை என்ற பாகுபாடு இல்லாமல் ஒன்றின் மீது மனம் வைத்து வணங்குவது இறை வழிபடாகும். ஆறநெறிமூலம் தான், மனிதகுலம் வாழ்வில் அமைதி அடைய முடியும் என்கிறார் மகரிஷி*

***"அறநெறியை உணர்த்தித் தான் பின்பற்றும் முறை "பக்தி" வழியாகும். தானே உணர்ந்து பொறுப்போடு வாழும் வழிஞான வழியாகும்"***

***(வேதாத்திரி, மனவளக்கலை 2 ப.138)***

*என்று கூறுகிறார் மகரிஷி மக்கள் இறை நிலையை உணர்ந்து அறநெறிப்படி வாழ வேண்டும் என்பதனை*

***"இறையுணர்வும் அறநெறியும்-பேறாய்ப் பெற்ற***
***எவருக்கும் எண்ணம், சொல் செயல்கள் மூன்றில்***
***மறைபொருளே பொருத்தமுள விளை வாய்த் தோன்றி***
***மனதுக்கு இன்ப துன்பம் அமைதி என்னும்***
***நிறைவு தரும் திருவருளின் நடனம் காண்பார்"***

***(வேதாத்திரி , ஞானக்களஞ்சியம் 1, பா.274)***

*இப்பாடல் வரிகளின் மூலமாக இறையுணர்வை உணர்த்துகிறார் மகரிஷி.*

*மகரிஷி கடவுளைபற்றி அளிக்கும் விளக்கமானது, இறைவன் அகண்டகாரமானவன் என்பது மறுக்க முடியாத உண்மை. இறைவினை எந்த உருவத்தில் முறையில் கடவுள் என்று மனதால் நினைத்து வணங்கினாலும் , அவரவர் அறிவுதான் உருவமெடுக்கிறது. உண்மையில் அவரவர்களுடைய அறிவைத்தான் கடவுளாக வழிபடுகிறோம் என்று மகரிஷி தெளிவாக விளக்குகிறார்.*

**மந்திரம், தந்திரம், எந்திரம்**

*மகரிஷி, தனக்கு என்ன வேண்டும் என்பதைத் தெளிவாக புரிந்து கொண்டு, அவற்றை சங்கல்பங்களாக்கி பல முறை அதையே நினைத்து சொல்ல தந்திரம் உதவுகிறது. இறையுணர்வில்*

*தெறிந்த அறிவின் விழிப்பில் வாழும் வரைக்கும், மனிதன் சிலை வணக்கம் என்னும் பக்தி நெறியில் வழிபடுதல் தவிர்க்க முடியாது என்கிறார் மகரிஷி. மேலும்*

***"பேச்சுப் பிழையில்லா மந்திரங்கள்***
***உண்டவற்றைப் பிழையாய்ச் சொன்னால்***
***பெற விரும்பும் பயன்கிட்டா சிக்கல்***
***பல வாழ்வில் எழும் பிழை செய்யாதீர்"***

***(வேதாத்திரி, ஞானக்களஞ்சியம் II, பா 1614)***

*என்று மந்திரங்களை சரியாக உச்சரிக்கும் போது தான் பயன் கிடைக்கும் என்கிறார்.*

***"மந்திரத்தை சொல்லும் போது ஆற்றல் உயரும். அதே நேரத்தில் அக்கருத்தை இணைத்து அனுப்ப ஒரு மீடியம் ஒரு மையம் பொருளாக உருவமோ, படமோ வைத்து உயிர்கலப்புப் பெறுதல் "யந்திரம்" என்று கூறுகிறார்கள். பின்னர் பிராத்தனை மூலமாக தமக்கு வேண்டுவதை பெறுவது தந்திரமாகும்" என்று விளக்குகிறார் மகரிஷி***

***(மனவளக்கலை பாகம் 3 ப 105)***

**விக்கிரங்களின் மகத்துவம்**

*எல்லா கோயில்களுமே ஒரு ஆற்றல்களம். ஆலயத்திற்குள் உட்கார்ந்து பிரத்தனை செய்வது, தனிமையில் சிந்தனை செய்வது என்ற நிலையில் மனதிற்கு ஒரு நுண்ணிய இயக்கம் உண்டாகும். இதை மகரிஷி* AUTO SUGGESTION *என்று கூறுகிறார்.*
*இதனை மகரிஷி,*

***"பஞ்சலோகங்களினால் ஆனதகட்டில் சில அட்சரங்களை மந்திரங்களை எழுதி, உருவேற்றி, அதைச் சிலைகளின் கீழ்புதைத்து வைக்கின்றனர். தினந்தோறும் அதனைச் சுற்றி வரும் போது அங்கு ஒரு ஆற்றல்களம் உண்டாகின்றது"***

***(வேதாத்திரி மனவளக்கலை II, ப.165)***

*விளக்குகின்றார் விக்கிரக வழிபாட்டு முறையில் அவரவர்க்கு ஏற்றார்போல் வழிபாடு செய்து கொள்ளலாம். சிந்தனை வளர்ச்சி பெற்றது முதல் இன்று வரை அவரவர்க்கு ஏற்றார் போலத்தான் இறைவழிபாட்டினை மக்கள் செய்து வருகின்றனர்.*

**விரதங்கள்**

*உடலை ஆரேக்கியமாக வைத்துக்கொள்ள விரதம் இருக்கும் போது உடல் உறுப்புகளுக்கு ஒய்வு கிடைக்கின்றது.*

*மகரிஷி ஒய்வு நாட்களாக அமாவாசை பௌர்ணமி என்ற இரண்டு நாட்களில் வயது வந்தோர் யாவரும் ஒரு வேளை மட்டும் உண்டு தியானத்தில் ஈடுபட வேண்டும் என்பதை,*

***"ஓய்வு நாட்கள் மாதம் இரண்டேயாகும் ஒன்று சந்திரன் முழுதும் ஒளி வீசும் நாள் தேய்ந்து ஒளி அற்றிருக்கும் நாள் மற்றாம் அத்தினங்களில் ஓர் வேளை ஊண் தியானம் கொள்வார்"***

***(வேதாத்திரி, ஞானக்களஞ்சியம் II.பா 953)***

*என்ற பாடல் வரிகள் மூலம் உணர்த்துகிறார். அறிவினை நல்ல வழியில் திருப்ப, ஆன்மிக நாட்டப் பயிற்சி அவசியம் என்று விஞ்ஞான ரீதியாக விரதமுறையை விளக்குகிறார்.*

**தீப வழிபாடு**

*மக்கள் சூரியனையும் சந்திரனையும் வணங்கி வருகின்றனர். ஜோதி வழிபாட்டினை இந்துகளும், கிருத்துவர்களும் மெழுகுவர்த்தி ஏற்றி வழிபாடு செய்கின்றனர். நாம் தீபம் ஏற்றும் போது இருள் நீக்கி வெளிச்சம் உண்டாகும் என்பதனை,*

> ***"நாம் வாழும் வீட்டில் தீபத்தை வைத்து ஆயுளை விருத்தி செய்து கொள்ள வேண்டும்" (வள்ளலார் திருவருட்பா ப.492)***

*என்கிறார் வள்ளலார். மேலும்*

> ***"இரவில் தீபம் இல்லாத விடத்து இருக்கக்கூடாது அது பிராணத்தை நசு்டம் செய்துவிடும்" (மேற்படி ப.491)***

*என்று தீபத்தின் பெருமையை எடுத்துரைக்கிறார் வள்ளலார். மகரிஷியும் தீபவழிபாட்டினை பற்றி பின்வருமாறு விவரிக்கிறார்.*

> ***"மனிதன் தமக்குள்ள அறிவைக்கொண்டு சீவகாந்தத்தை பெருக்கிக் கொள்ளவேண்டும். இதற்கு உயரம் குறைவனை விளக்கில் விளக்கெண்ணெய் அல்லது பசு நெய் விட்டு திரிபோட்டு மல்லிகை மொக்கு போலச் சுடர் எரியும் படி அமைக்க வேண்டும். விளக்கில் இருந்து 3 அடி அதிகபட்சம் 5 அடி தொலைவில் விரிப்பின் மீது அமர வேண்டும். பார்வை கீழ்நோக்கி பார்க்கும் படி அமைய வேண்டும். இதனால் முகம் பொலிவுற்று முகவசியம் உண்டாகும்.***
>
> ***உடல் மற்றும் மூளைச் செல்கள் புத்துணர்வு பெறும். ஆற்றல் பெருகும்"***
>
> ***(மனவளக்கலை ஆசிரியர் குறிப்பேடு பக் 49-51)***

*என்று வேதாத்திரியார் திருவிளக்கு வழிபாட்டின் அவசியத்தை உணர்த்துகிறார்.*

**கண்ணாடி வழிபாடு**

*பெருபாலான மக்கள் இன்றும் இறை வழிபாடு செய்யும் போது, தீபம், கண்ணாடி வைத்து படையலிட்டு வழிபட்டு வணங்கி வருகின்றனர். சீவகாந்த ஆற்றலை பெருக்க கண்ணாடி பயிற்சி செய்து பெருக்கி கொள்ளலாம் என்பதனை,*

> ***"கண்ணாடி பார்க்கக் காணலாம் உருவ நிலை***
> ***உண்ணாடிப் பார்க்க உணரலாம் உயர் நிலையை"***
>
> ***(வேதாத்திரி, ஞானக்களஞ்சியம் II, பா.1273)***

*என்று மகரிஷி கண்ணாடி பயிற்சியின் நன்மைகள் பற்றிக் கூறுகின்றார்.*

> ***"கண்ணாடி பயிற்சி செய்யும் போது***
>
> ***சுக்குமம் திணிவு பெறும். பயம், பரபரப்பு, மனக்குழப்பம் குறையும். சித்தியானால் நமது உருவம் மறைந்து வேண்டியவர் உருவம் தோன்றும். 51% உடல் மறந்தநிலை இருந்தால் பனிப்படலம் போல நம் உயிராற்றல் தெரியும்"***
>
> ***(மனவளக்கலை , ஆசிரியர் குறிப்பேடு பக் 72-73)***

*என்று பாடலின் வரிகள் மூலமாக தெரிவிக்கிறார். கண்ணாடியில் இறைவனைக் கண்டதாக வள்ளலார் தெரிவிக்கிறார், மகரிஷி நினைப்பவரின் உருவம் கண்ணாடியில் தோன்றும் என்கிறார் மகரிஷி.*

**வழிபாடு ஓர்உளவியல் கலை**

*மனிதன் மன வளம் பெற, வாழ்வில் மேம்பாடு அடைய, இயற்கையின் பெருமதிப்பை உணர மனிதன் தெய்வத்தை வணங்கிறான். சில நாடுகளில் கடவுள் வழிபாடு என்பது ஒரு*

*சடங்காகவே ஏற்படுத்தி வைத்திருக்கின்றனர். இறையாற்றல் புலன்களுக்கு எட்டாதது என்றாலும் அறிவின் முழுமையில் மனிதன் உணர்ந்து கொள்ள முடியும். அகநோக்கு பயிற்சியின் மூலமாக மனம், உயிர், மெய்ப் பொருள் என்ற மூன்று நிலைகளையும், இயக்க நியதிகளையும் இன்ப துன்ப விளைவுகள். இவற்றை உணர்ந்து கொள்ளமுடியும். அறிவில் முழுமை பெறாத மத ஆச்சாரியர்களின் ஆசை வார்த்தையில் மயங்கி, அறிவுக்கு பொருந்தாத பல சடங்குகளை பெருகி கொண்டும் பாமர மக்கள் தங்களுடைய வாழ்வு சுரண்டுப்படுவதை அறியமலே வாழ்கின்றனர். அறிவில் பண்பாடாத பாமரர்கள், குழந்தைகள் ஆகியோர்களுக்காக உருவக்கடவுள் வழிபாட்டு தேவைப்படுகிறது. வழிபடும் கடவுள்களின் உருவ அழகு, குணநல ஆற்றல் இவற்றுக்கேற்ப மனிதன் மனவளம் பெறுகிறாா, கல்வி, செல்வம், ஞானம் இவற்றிற்கு ஏற்ப கடவுள் வடிவங்களை கற்பித்து வணங்கினார்கள்.*

**முடிவுரை**

*இக்கட்டுரையின் வாயிலாக வேதாத்திரி மகரிஷியின் சிந்தனையில் ஆன்மிக சார்ந்த கருத்துக்கள் ஆராய்ந்துரைக்கப்பட்டுள்ளது. பக்தி, ஆன்மீகம், தன்னை அறிதலால் ஏற்படும் நன்மை, மௌனநோன்பின் பயன், இறைவழி பாட்டின் மூலம் இறையுணர்வு, மந்தரங்களின் பலன்கள், விக்கிரகத்தின் மகத்துவம், விரதத்தின் மகிமை, தீபவழிபாடு, கண்ணாடி வழிபாட்டின் சிறப்புகள் , அனைத்தும் இக்கட்டுரையின் கண் ஆராய்ந்துரைக்கப்பட்டுள்ளன.*

**துணை நூற்பட்டியல்**

1. வேதாத்திரி மகரிஷி மனவளக்கலை பாகம் 1, 2 ,3
2. வள்ளலார் - திருவருட்பா, உரைநடைப்பகுதி
3. வேதாத்திரி - ஞானக்களஞ்சியம் 1,2
4. மண்டுக உபநிடதம்.
5. மனவளக்கலை, ஆசிரியர் குறிப்பேடு

## References

1. Vethanthiri Maharisi, Manavalakalai, Volume 1, 2, 3.
2. Vallalar, Thiruvarutpa, Urinadaipaguthi.
3. Vethanthiri, Gnakalanjiyam, 1, 2.
4. Mandooga Ubanidatham.
5. Manavalakalai, Aasiriyar Kurippedu.